# புனர்வாழ்வு பணியில் யாழ்.குடா புறக்கணிப்பு!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 19 இதழ் 304
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-12-1994

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தத்தினுல் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வுப் பணிகள் யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்படமாட்டாது என பொதுசன தொடர்பு உல்லாசப் பயணத்துறை விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவிக்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

யுத்த நடவடிக்கையால்

(6ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் பதுங்கிதாக்குதல் போராளி வீரச்சாவு

[மட்டக்களப்பு[

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் மீது சிறிலங்கா பொலிசார் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்,

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். கடந்த 1ம் திகதி சொருவில் என்ற இடத்தில் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் மீது சிறிலங்கா பொலிசார் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இவ் எதிர்பாராத தாக்குத

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ ஜனுதிபதியின் விசேட செய்தியுடன் வெளியுறவு அமைச்சர்கதிர்காமர் 7-ம் திகதி இந்தியா பயணம்!

[கொழும்பு]

வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் புதன்கிழமை ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் விசேட செய்தியுடன் இந்தியா பயணமாகவுள்ளார். இந்திய விஜயத்திற்கு முன்னதாக அவர் நேற்று பங்களாதேஷிற்கு புறப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு.பி.வி. நரசிம்மராவுக்கான அந்த விசேட செய்தியின் உள்ளடக்கம் தொடர்பாக திரு. கதிர்காமர் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தியப்பிரதமரைச் சந்தித்து அச்செய்தியை வழங்கப்போவதாக மட்டும் அவர் கூறினுர்.

வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய அரசாங்கத்துடன் இருதரப்பு மற்றும் பிராந்திய விடயங்கள் தொடர்பாகம்

(6ம் பக்கம் பார்க்க)

## இறந்து விட்டதாக கருதிய குழந்தை உயிர்தப்பியது

(ஆனைப்பந்தி)

சுகயீனம் காரணமாக மயக்கமடைந்த குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற போது அங்கு நின்ற சிலரால் இறந்து விட்டதாக கூறிதிருப்பியனுப்பபட்ட குழந்தையை வீட்டுக்கு கொண்டு வந்த போது வீரிட்டு கத்தியது.

(6-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்குஎதிராகஒப்பந்தம் எதுவும் செய்யப்போவதில்லை

### லக்ஷ்மன் கதிர்காமர் அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்த ஒரு இரகசிய ஒப்பந்தமும் தாம் செய்யப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா செல்லுமுன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது அயல்நாட்டுப் பயணங்கள் தொடர்பாக நேற்று பத்திரிகையாளர் மத்

(6ம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்குமாறு ஜனுதிபதிக்கு கோரிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பிரச்னையைத் தீர்க்குமுகமாகப் பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறந்துவிடவேண்டும் என தாம் ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கோரியிருப்பதாக யாழ்.

(6ம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைக்கு லேக்ஹவுஸ் ஊழியர் எதிர்ப்பு

[கொழும்பு)

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பங்குகளை வெளிச் சந்தையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் விற்கத் திட்டமிடுவதற்கு லேக்ஹவுஸ் ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கடபடுகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; பங்குகள் விற்

(6-ம் பக்கப்பார்க்க)

## கணேசலிங்கத்திற்கு எதிராக ஐ.தே.கவிற்குள்போர்க்கொடி

[கொழும்பு[

கொழும்பு மாநகரசபை பதில் மேயர் திரு. கே. கணேசலிங்கம் பொ. ஐ. மு. அரசின் பக்கம் சாய்கிருர் என ஐ. தே. க. உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

திருமதி சந்திரிகாவுக்கு ஆதரவாக சபையில் திரு. கணேசலிங்கம் நடந்து வருவதாக குற்றம் சாட்டப்படுகிறது. இதனுல் திரு. கணேசலிங்கம் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எட்டு உறுப்பினர்கள் கட்சியின் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா/த) பரீட்சை இன்று முதல் ஆரம்பம்

[கொழும்பு)

க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சை நாடு முழுவதிலும் இன்று ஆரம்பமாகிறது.

3256 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சைக்கு ஐந்து லட்சத்தி அறுபதாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சை நடாத்துவதற்கு தேவையான இறுதி

(6-ம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய செயலர் ஜனுதிபதி சந்திப்பு

(கொழும்பு)

பொதுநலவாய செயலாளர் நாயகம் எமகோ நியாகோ ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சமீபத்தில் சந்தித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்தில் அடுத்த ஆண்டு இறுதி அளவில் நடைபெற இருக்கும் உச்சிமாநாடு சம்பந்தமாகவும் அவர்கள் கலந்துரையாடினுர்கள் என்று கூறப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடியதாகவும் தெரிய வருகிறது. ம-ரி

## நயினுதீவில்ஈ.பி.டி.பி.யினரின் ஆதிக்க முயற்சி முறியடிப்பு!

(ஆனைப்பந்தி)

நயினுதீவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்ற ஈ. பி. டி. பி.யினரின் முயற்சி தோல்வியில் முடிந்ததாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

சிறிலங்கா கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நயினுதீவுக்குச் சென்ற ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள், அங்குள்ள சில பொதுமக்களைப் பிடித்து, 'எங்களுக்கு ஈ. பி. டி. பி யினர் வேண்டும், அவர்

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
### இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து (விண்ணப்பங்கள்) 1994-12-28 திகதி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்

1. உதவி விரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர் சித்தமருத்துவம்
2. தற்காலிக செய்முறை காட்டுநர் - சித்தம நந்துவம்
3. தற்காலிக உதவி விரிவுரையாளர் - வரலாறு

சம்பள அளவுத்திட்டம்

உதவி விரிவுரையாளர் ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலி உதவி விரிவுரையாளர் ரூபா 5,270/- (நிலையானது)மாதமொன்றுக்கு

தற்காலிக செய்முறை காட்டுநர் 4,420/- (நிலையானது)மாதமொன்றுக்கு

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென துறைத்தலைவராலும். பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவர் துணைவேந்தரால், விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவியில் வைக்கப்படுவதுடன் 6050 - 10x250 - 8,550/-ரூபா (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கப்படுவர்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) டன் சித்திபெற்றுள்ள பட்டதாரி ஒருவர் உதவி விரிவுரையாளராக (தகுதி காண்) ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் தகுதிகாண் தரத்திற்குக் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

குறிப்பு:

(அ) உதவி விரிவுரையாளர் ஒருவர் ஆண்டுக்கு ரூபா 10,000- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் /சம்பளத்தின் 10 வீதமும் புத்தகப் படியாக ஒவ்வொரு காலாண்டிய ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாக செலுத்தப்படும்

(ஆ) 1993 மே 12ம் திகதி 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா600/- செலுத்தப்படும்

தற்காலிக உதவி விரிவுரையாளர் வரலாறு பதவிக்கு, பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்தும் 1994 இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23X 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாகவிண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: விண்ணபப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு, 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணம் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-11-30 (எ 4563)

---

கூட்டுறவுப் பெரியார்
அமரர் வீரசிங்கம்
ஒரு கூட்டுறவுப் பல்கலைக்கழகம், கூட்டுறவு இயக்கத்தை வட பகுதியில் கட்டி எழுப்ப அவர் ஆற்றிய சேவை மகத்தானது,

# 30-வது ஆண்டு நினைவு நாளை

நினைவு கூருகிறோம்.

## வேலணை பல நோ.கூ. சங்கம்,
வேலணை.

[ஏ-4548]

---

அமரர் வீரசிங்கம் அவர்களின்
கூட்டுறவுப்பணி ஏழை, விவசாய, தொழிலாளர்களின் வாழ்வை வளம்படுத்தியது.

# 30-வது ஆண்டு நினைவு

நாளாகிய இன்று
அவரின் கூட்டுறவுப் பணியினை நினைவு கூருகின்றோம்.

## யாழ். மாவட்ட பிடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,

இருபாலை வீதி, கோண்டாவில்.

(ஏ-4555)

---

### வரி விளம்பரம்

**11-11-94 முதல் வியாழ மாற்ற பலாபலன்கள்**

சத்யாவின் குருமாற்றம் ரூ. 10/- எங்கும் கிடைக்கும் பாடசாலைப்புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், காகிதத்தாள்களுக்கு சுரேகா புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-1337)

**ஆங்கிலம் கணிதம் 95**

ஆண்டு 5, 6, இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் ஆசிரியர் B. Se 85, சிவன் கோவிலடி. மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1335)

---

"உலகில் கூட்டுறவில் உயர்ந்தது எம் தமிழ் ஈழம்"
என்று முழக்கமிட்ட அமரர் வீரசிங்கத்தின் 30 வது ஆண்டு நினைவுதினத்தில் அன்னாரது கனவை நனவாக்க

**இடசங்கற்பம் பூணுவோம்**

# கட்டைவேலி - நெல்லியடி
# பல நோ. கூ. சங்கம், கரவெட்டி

(எ-4564)

---

கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கம் அவர்களின்
★ 30 வது ஆண்டு நினைவு நாளில் ★
அப்பெருந்தகையின் அரும்பெரும் பணிகளை நினைவுகூர்ந்து அன்னவர் காட்டிய வழியில் கூட்டுறவை மேம்படவைப்போமாக

# நல்லூர் பல நோ.கூ. சங்கம்

[எ 4553]

# கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம்

# 30வது ஆண்டு நினைவு மலர் (5-12-1994)

## பெரியார் வீரசிங்கம் அவர்களின் கனவை நனவாக்குவோம்

''மனித வாழ்வுத் தேவை முழுவதையும் நிறைவேற்றிச் சமுதாய அநீதிகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கி நீதியும் அறமும் சார்ந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வல்லது கூட்டுறவு'' என்று கூறிய கூட்டுறவின் தந்தை றொபோட் ஓவனின் கூட்டுறவுக் கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றவேண்டுமென்றும், அது தனக்கும் பிறர்க்கும் உதவுமென்றும் தொடர்ந்து கூறுகின்றார். ஆனால் கூட்டுறவுக் கொள்கையின் உயர்ந்த தாற்பரியங்களை விளங்கிக்கொள்ள முடியாதவர்கள் அல்லது அதனை நடைமுறைப்படுத்த விரும்பாதவர்கள் கூட்டுறவுக் கொள்கையை வெறும் ஏட்டுச் சித்தாந்தம் என்று மிக இலகுவாகவே கூறிவிடுகின்றனர்.

ஆனால் இக்கொள்கை வழி நின்று ஒரு கூட்டுறவாளன் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்த கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களை கூட்டுறவு அமைப்பின் இலட்சிய புருஷன் என்றால் அதில் மிகை ஏதும் இல்லை, கூட்டுறவைத் தனது வாழ்வில் மூச்சாகக் கொண்டிருந்த பெரியார் அதனைப் பொருளியல் ரீதியாக மட்டும் சிந்திக்காமல் மறுமலர்ச்சிக்குரிய மார்க்கமாகவும், ஆன்ம ஈடேற்றத்துக்குரிய சமயமாகவும் கண்டார். பெரியாரின் கூட்டுறவுக் கருத்துக்கள் செறிந்த வீரமுழக்கமானது எமது மாவட்டத்தோடு மட்டுமல்லாமல், தேசிய, சர்வதேச மட்டம் வரை சிந்திக்க செய்திருக்கின்றது,

கூட்டுறவு அமைப்பானது எமது பிரதேசத்தில் பெருமைப்படக்கூடியளவிற்கு ஒருகால கட்டத்தில் வளர்ச்சி கண்டது என்றால் அது கூட்டுறவுப்பெரியார் வீரசிங்கம் அவாகளின் கூட்டுறவுப் பணியே. பெரியார் வீரசிங்கம் அவர்கள் சிறந்த கல்விமானாகவும், உயர்ந்த கல்லூரியின் அதிபராகவும், பரந்த சிந்தனையாளராகவும் ஏன் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தாலும் அவர் சிந்தனை முழுவதும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த கிராமிய மக்களின் பால் மிகக் கூடுதலாக இருந்தது. ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தேவையுள்ள மக்களை நோக்கி சேவை செய்யவும் பொருத்தமான அர்த்தமுள்ள அமைப்புக் கூட்டுறவு என்பதை மிகத் திடமாகக் கண்டுகொண்டார்.

கூட்டுறவுக் கொள்கையைப்



பின்பற்றிய பெரியார் கூட்டுறவுக் கல்விக்கு மிக முக்கியத்துவம் வழங்கினர். இது அவரது கூட்டுறவுய் பாதையின் வெற்றி இரகசியம். தேவையான இடங்களில் தானே நேரில் சென்று கல்வி கருத்தரங்குகளை நடாத்தினர். கூட்டுறவு அறிவைப்பரப்பும் நோக்கமாக ''ஐக்கிய தீபம்,' என்னும் தமிழ் பத்திரிகையையும் ''கூட்டுறவு என்ற ஆங்கில பத்திரிகையையும் வெளிவரச் செய்தமையோடு யாழ், மாவட்டத்தில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை அதாவது இலங்கையிலேயே முதலாவது கூட்டுறவுக் கல்லூரி என்ற பெருமையைத் தட்டிக்கொண்டு இக் கல்லூரியை அமைத்து ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாகச் செயல்பட்டமை இவரது கூட்டுறவுக் கல்விக் கொள்கையை விளங்கிக் கொள்ளப் போதுமான சான்றாகும்.

இலங்கை முழுவதிற்குமே கூட்டுறவுச் சிந்தனையை பரப்பிய பெரியார் வெளிநாடுகளில் இருந்து கூட்டுறவை அறிய ஆராய வந்தவர்களிற்கு தேவையான, பொருத்தமான கருத்துக்களை முன்வைத்ததன்மூலம் இவரது கூட்டுறவு ஆற்றலை உலகநாடுகளும் அறிய முடிந்தது. இவர் தனது அறிவால், ஆற்றலால் ஆளுமையால் கட்டியெழுப்பிய, வழி நடத்திய கூட்டுறவு நிறுவனங்கள் பல. மலையாளம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுமாகாண வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை, யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, வடமாகாண விவசாய உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க சமாசம். அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவரது கூட்டுறவுப் பண்பால் வளர்க்கப்பட்ட கூட்டுறவாளர்கள் பலர் அவருக்கு பின்பும் அவர்கட்டியெழுப்பிய கூட்டுறவு அமைப்புக்கள் நலிவடையா வண்ணம் செயலாற்றிவந்துள்ளார்கள். இன்றும்

(5ம் பக்கம் பார்க்க)

சு. சிவசுப்பிரமணியம்
மாவட்ட செயலாளர்
யாழ். மா. கூ. சபை

## கூட்டுறவுப் பெரியார்

எம்தேசத்தில் கூட்டுறவை முதல் கொலுவேற்றிய பெருந்தலைவர்
கூட்டுறவின் கொள்கைவழிநின்று, கூடி உழைப்பதற்காம்
வாட்டமில்லா கூட்டுறவுப்பயிர் வளர்த்தஆசான் வடபகுதி
ஐக்கிய சங்கங்களின் அணித்தலைவர் நலிவுடைந்த மக்களின்
நல்வாழ்வை உயர்த்தியவர். ஐக்கிய தீபமென அணையாச்சுடரானர்
இத்தரணி மீதினிலே குன்றில்இட்ட தீபமானர். கூட்டுறவின்
நாட்டத்தில் மக்கள் பசிப்பிணிதீர்க்க தம்நல்வாழ்வை
உரமாக்கியவர். கூட்டுறவுப் பெரும் விருட்சத்தின் ஆணிவேரானர்
நாட்டினிலே கூட்டுறவு நலிவடையக்கண்டு மனம்சகியா சான்றேன்.

க. ஜெயகௌரி
(வேலணை பல. நோ. கூ. சங்கம்)

## ஞாலத்தில் சேவை செய்தவர்

கல்வி கலைகள் மேன்மையுற
கவின் பெரும்சேவை செய்தனரே
நல்வித மாக விவசாயி
நலம்பெறு சங்கம் அமைத்தனரே
வல்லமை நிறைந்த கூட்டுறவு
வளர்த்து நாட்டில் தொண்டாற்றி
தொல் பாராது மன்றமதில்
தூய சேவை செய்தனரே

★

நாட்டுச் சேவை செய்திடவே
நலம் பெறத் தன்னை அர்ப்பணித்நார்
கூட்டுறவுச் சங்கங்களை
குறைகள் நீங்க அமைத்தவர்காண்
ஏட்டில் ஐக்கிய தீபந்தனை
ஏற்றி வைத்த பேரறிஞன்
காட்டினன் செயலில் வீரந்தனை
கனவான வீரசிங்கம் வாழி

மானிப்பாய் இந்துக்கல்லூரி
மாண்பு நிறைந்த அதிபருமாய்
ஞானியாய் வீரசிங்கமவர்
ஞாலத்தில் சேவை செய்தனரே
மோனம் மிகுந்த கூட்டுறவு
மேலாம் சங்கம் பல அமைத்தே
தேனமுதான பேச்சினலே
தெள்ளிய ஒற்றுமை பரப்பிவந்தார்

—கவி

தன்னலம் கருதா பண்பாளர், கூட்டுறவு இயக்கத்தை கட்டி வளர்த்தோன், உறுதியான கொள்கை
★ தளம்பாத பெருந்தலைவன் ★

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின்
நினைவுநாளைக் கொண்டாடுவதில் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும்
பணிப்பாளர்களும் அங்கத்தவர்களும் மகிழ்ச்சி அடைகின்றோம்

சங்கானை பல. நோ. கூ. சங்கம்

(எ4549)

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் அடிச்சுவட்டில்
பலம்பொருந்திய கூட்டுறவுச் சமுதாயத்தை கட்டி எழுப்புவோம்

★ குறைந்த கட்டணத்தில் ★ குறித்த தவணையில் ★ தரமான எழுத்துக்களில்
அழகாக வடிவமைக்கப்பட்டு துரிதமாக உங்கள் அச்சகவேலைகளை செய்வதற்கு

கூட்டுறவாளர் அச்சகம், யாழ். மாவட்ட கூட்டுறவு சபை அச்சகத்தை
நாடுங்கள்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை
14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். [எ4565)

ஃ நாடுங்கள்! ஃ விரையுங்கள்!

தமிழீழத்தில் உடைதயாரிக்கும் நிலையத்தை உன்னத முறையில்
குறைந்த செலவில், சிறந்த தயாரிப்புக்களை, மக்கள் கவரும் முறையில்
தயாரித்து வழங்கும் ஒரேயொரு கூட்டுறவு நிறுவனம்

# பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ, சங்கம்

## பண்டத்தரிப்பு, சங்கானை.

நிறை, தரம், மணம், குணம் குன்றாத வகையில்
★ பாண், ★ பிஸ்கட், ★ கேக் வகைகள் தயாரித்து கொடுக்கும் நிறுவனம்
பண்டத்தரிப்புப் பரிஷ் பல. நோ. கூ. சங்கம்
வடபகுதி கூட்டுறவு இயக்கத்தை ஸ்தாபித்த அமரர் வீரசிங்கத்தின் சேவை
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்ற எமது நல்வாழ்த்துக்கள்

(ஏ- 4550)

---

கூட்டுறவாலே நாட்டினை உயர்த்திடலாம் என்பதை செயலில் காட்டிய
பெருமகன் அமரர் வீரசிங்கம் அவர்களுக்கு நாம் தலைவணங்குகின்றோம்
நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்காமல் நான் என்ன செய்தேன் என்று
ஒவ்வொருவரும் தன்னைதானே கேட்டுககொள்ளும் மனநிலை உருவானால்
கூட்டுறவாலே நாட்டினை உயர்த்திடலாம்

# ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள், அங்கத்தவர்கள்.

(ஏ-4546)

---

கூட்டுறவுவை வாழ்வியலின் ஓர் அங்கமாகக் கொண்ட

## அமரர் வீரசிங்கம் அவர்களின் 30-வது ஆண்டு நினைவுதினத்தில்

அவரது தலைமைத்துவப் பண்பையும் ஆற்றலையும் நினைவுகூர்ந்து செற்படுவோம்.

# வடமாகாண பனை, தெ. வ. அபி. கூ. ச. சமாசம்,

## யாழ்ப்பாணம்.

(ஏ-4547)

---

## கூட்டுறவுமேதை பேரறிஞர் அமரர் வீரசிங்கத்தின்

தன்னலமற்ற சேவை வடபகுதியெங்கும் வியாபித்து கூட்டுறவு ஆலவிருட்சமாக தழைத்துள்ளது.

## 30 வது ஆண்டு நினைவை நினைவு கூருகிறோம்

# அளவெட்டி - மல்லாகம் பல. நோ. கூ. சங்கம்,

## அளவெட்டி — மல்லாகம்.

[ஏ—4560]

---

''கூட்டுறவு நாட்டுயர்வு'' என்ற இலட்சிய முழக்கத்தோடு கிராமம் கிராமமாக
கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தெடுப்போம் என உறுதிபூண்டு

## அமரர் வீரசிங்கத்தின் 30-வது ஆண்டு நினைவை
## இதயத்தில் இருத்துவோம்

# தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம்

## தெல்லிப்பழை

[ஏ4561]

---

கூட்டுறவின் தந்தை இலட்சியவாதி, சமூகசேவையாளர், பண்பில் இனிய

## பெரியார் அமரர் வீரசிங்கம் வளர்த்த
## கூட்டுறவு இயக்கத்தை

கட்டியெழுப்புவோம்

# யாழ். பல நோ. கூ. சங்கம்

## யாழ்ப்பாணம்.

(ஏ-4554)

### மணிவாக்கு

உயிரைவிடும் தியாகியைவிட உயர்ந்த தியாகியாக வாழ்வது மிகவும் சிரமமானது. அப்படி வாழ்வதற்கே அதிகவல்லமை வேண்டியிருக்கிறது.

ஒரேசுமான்

## நமது நோக்கு

### பொதுநலச் சேவை

உலகின் பலபகுதிகளிலும் சந்தைப் பொருளாதாரம் தனது கரங்களை அகல விரித்துவருகிறது.

அரசியற் சித்தாந்தங்கள் மாறுபட்டு, பொருளாதாரம் புதிய போக்கிலே செல்கின்ற காரணத்தாற் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறுர்கள்.

சந்தைப் பொருளாதாரத்தால் விலைகள் கட்டுப்பாடின்றி உயர்வதும், உற்பத்தி, விநியோக முறைகள் அரச கட்டுப்பாடுகளுக்கு அப்பாற் செல்ல முற்படுவதும் ஊழியர்கள் பாதிக்கப்படுவதும், பலதொல்லைகளை உருவாக்குகின்றன.

எனவே-கூட்டுறவு இயக்கம் இந்தப்பாதிப்புகளை ஓரளவிற்கேனும் குறைக்க உதவவேண்டும்.

இரண்டாவது உலகப் போரின் போது, நாட்டு மக்களின் நலிவைப் போக்கக் கூட்டுறவு இயக்கம் ஆற்றிய தொண்டினை எவரும் மறந்துவிட முடியாது.

அதேபோல- இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவு இயக்கத்தின் பணி பல வழிகளில், பலதுறைகளிற் செயற்பட வேண்டியது அவசியமாகிறது.

மக்களின் அன்றுடத் தேவைக்கான பொருள் விநியோகத்தில் மாத்திரமல்லாது, நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதில் மாத்திரமல்லாது, சிறு கைத்தொழில் முயற்சிகளைக் கிராமம் தோறும் ஊக்குவிக்கவும் கூட்டுறவு இயக்கம் விரிவுபடுத்த வேணடும்.

வடமாகாணம் கூட்டுறவு இயக்கத்தாற் பல நன்மைகளைக் கண்டது. தெற்கிலிருந்து வந்து இங்கு அதன் வளர்ச்சியை வியந்து போற்றிய காலம் மாறிவிட்டதா?

முன்பு- வீரசிங்கம் போன்ற பெரியார்கள் பொதுநலச் சேவைக்கென்றே தம்மை முழுமையாக அர்ப்பணித்த காரணத்தாற் பொதுமக்கள் பல நன்மைகளைப் பெற வாய்ப்பிருந்தது.

இன்று— பொதுநலச் சேவைக்கு அந்த மனப்போக்கிற்கு என்ன நடந்தது.

பொதுநலச் சேவையின் ஒரு அங்கமான கூட்டுறவுப் பண்புபற்றிய விளக்கங்களும், கருத்துரைகளும் பரப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது!

### நயினுதீவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இங்கு நிர்வாகம் நடத்துவதை நாங்கள் விரும்புகின்ரும்' என்று எழுதப்பட்ட மகஜரில், ஆயுதமுனையில் மிரட்டிக் கையெழுத்திட வைத்தனராம். பயத்தினுல் அப்பொதுமக்களும் கையெழுத்திடவே, அம்மகஜரை நயினக் கடற்படை முகாம் பொறுப்பதிகாரிடம்கொடுத்த ஈ. பி. டி.யினர் தமக்கு மக்கள் ஆதரவு இருப்பதாகக் காட்டிவிட்டுச் சென்றுவிட்டனராம்.

ஈ.பி.டி.பி.யினரின் அட்டகாசங்களை எண்ணி உள்ளூரக் கலக்கமடைந்த பொதுமக்கள் உடனே ஈ. பி. டி. பி.யினர் எங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் ஆயுதமுனையில் எம்மை மிரட்டியே கையெழுத்திட வைத்தனர். அவர்களை இங்கு விடவேண்டாம் என்று ஒரு மகஜரை எழுதிக் கையெழுத்திட்டு அந்த மகஜரைக் கடற்படை முகாம பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனராம்.

இரு மகஜர்களையும் வாங்கிக்கொண்ட அந்த அதிகாரி நிர்வாகம் நடத்தும் நோக்குடன் வந்த ஈ. பி. டி. பி. யினரிடம் பொதுமக்கள் கொடுத்த மகஜரைக் காட்டி, 'மக்கள் உங்களை வெறுக்கின்ருர்கள். ஆகவே நீங்கள் இங்கு தேவையில்லை' எனக் கூறித் திருப்பி விட்டாராம்.

இதேபோன்று முன்னரும் பல தடவைகள் ஈ. பி. டி. பி.யினர் நயினுவுக்குள் நுழைய முயன்று தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது

ஏனைய தீவுகளில் இராணுவத்துடன் இணைந்து இயங்கி வரும் ஈ பி.டி, பியினர் நயினுதீவில் ஆதிக்கம் செலுத்துவதற்கு அப்பகுதி மக்கள் தடையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. 101

## இராசி பலன்

05 - 12 - 1994

திங்கட்கிழமை

**(தமிழுக்குகார்த்திகை19)**

திருதியை இரவு 11-59 வரை: பூராடம் நள்ளிரவு 1-55 வரை: சித்தயோகம், இராகுகாலம் காலை 7-40 முதல் 9-04 வரை. சுபவேளை காலை 10-35 முதல் 11-05 வரை |

மேடம்: வீண்கர்வம், தொழில் நஷ்டம், அதிக யோசனை

இடபம்: காரிய லாபம், மனமாற்றம், இனசன உறவு

மிதுனம்: புதிய முயற்சி, பிதா சிந்தை, பயணநன்மை.

கடகம்: மனவேதனை, கல்வியில் அலைச்சல், பணமுடை

சிங்கம்: அவப்பெயர், குடும்ப வேற்றுமை, வாய்த்தர்க்கம்

கன்னி: கடினவேலை, சகோதர துன்பம், அமைதி குன்றல்

துலாம்: பொதுப்பணி, உயர்ந்த ஸ்தானம், காரிய சித்தி

விருச்சிகம்: முதியோர் பகை, சாமானியர் கண்டனம், அகால போஜனம்,

தனுசு: பிரச்னையை தீர்த்தல், மனமாற்றம், உறவினர் பெருமை

மகரம்: தொழில் சங்கடம், கடன்படல், தைரியமின்மை

கும்பம்: பொருள் சேர்க்கை, மாமனுர்சகாயம், உற்சாகம்

மீனம்: விரோதிகளை ஜெயித்தல், தெய்வசிந்தனை, குடும்ப சுகம்

ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### எண்ணெய் முழுக்கு!

எண்ணெய் முழுச்கால் மேல் தோல் மினுமினுப்பாக இருக்கும்; உடல் வெப்பம் தணியும்: கண் குளிர்ச்சி ஏற்படும்; தோல் நோய்கள் வராது.

எண்ணெய் தேய்த்தபின் இளவெயில் படும்படியாகச் சிறிது நேரம் இருக்கவேண்டும். ஏன் தெரியுமோ? எண்ணெய் தடவிய தோலின் மேல் சூரியஒளி படுவதால் D உயிர்ச்சத்து உடலிற் புகுமாம்.

சனிக்கிழமை இதற்குரிய நாள், ஆனுல்—அதிகாலையே எழுந்து மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்குப் பரபரப்போடு செல்லவேண்டியதால் நேரம் கிடைப்பதில்லை எனப் பெற்ருேர் கவலைப்படுகிருர்கள்.

அரைகுறை — அழுத்தமற்ற சுவரில் சித்திரம் தீட்டமுடியாது என்பதை உணரும் காலம் வருமா?

—மயூரன்

### பராமரிப்பு பூங்கா திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

கரவெட்டி மேற்கு இராச கிராமத்தில்சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினுல் இப்பூங்கா திறந்து வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### பெரியார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது பிரதேச கூட்டுறவு இயக்கமானது ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பில் சிக்குண்ட மக்களை காப்பாற்றுவதில் கணிசமான அளவில் பங்காற்றி வருகின்றது என்றுல் பெரியார் வீரசிங்கம் அவர்களின் வழிகாட்டலில் தோன்றிய கூட்டுறவாளர்களின் சேவை என்றே கூறலாம்.

தமிழீழ விடுதலைப்போரிலே பல அனர்த்தங்களையும் அவலங்களையும் சந்தித்து பொருளாதார ரீதியில் மிகவும் சீர்குலைந்துள்ள எமது பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான அமைப்பாக காணப்படுவது கூட்டுறவு இயக்கம் ஒன்று தான். கூட்டுறவாளர்களாகிய நாம் பெரியார் வீரசிங்கம் அவர்கள் காட்டிய கூட்டுறவுத் தலைமைத்துவத்தை, அதன் பண்புகளை பின்பற்றி நலிவடைந்த எமது பிரதேசத்தை பொலிவடையச் செய்வதன் மூலம் அப்பெரியாரின் கனவை நனவாக்குவோம்,

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-05**

**திங்கள் இரவு**

08-01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
08-20 - தாயகப் பாடல்கள்.
08-30 - செய்திகள்
08-40 - தரிசனம்-மிருதங்கக் கலைஞர் சங்கீதரத்தினம் சி. மகேந்திரன் அவர்களுடனு செவ்வி
09-00 - இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

**1994-12-06**

**செவ்வாய் காலை**

07-02 - மாவீர வணக்கம்
07-15 - இன்றைய தாரகை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைசெய்திகள்
07-40 - தாயகப் பாடல்கள்
08-00 - காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

**நல்ல தண்ணீர் என்று பெற்றிடவே-நாம் நல்ல மரங்கள் நட்டிடுவோம்.**

கூட்டுறவுச் சேவையில்

## அமரர் வீரசிங்கம்

1920ல்—மது ஒழிப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டார்.

1937ல்—''வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை'' ஆரம்பித்து அதன் முதல் தலைவராகி வடக்கையும் கிழக்கையும் இணைத்தார்.

1950ல்—''கூட்டுறவுத் தத்துவங்களும் நடைமுறைகளும்'' என்னும் நூலை முதன் முதல் வெளிட்டார்.

1952ல் –வட்டுக்கோட்டைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகி கூட்டுறவுக் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் கல்லூரியை ஆரம்பித்தார். ஆங்கிலத்தில் ''கூட்டுறவு'' என்னும் பத்திரியும், தமிழுல் ''ஐக்யதீபத்தை''யும் வெளியிட்டார்.

1953—54ல் கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள், குறைபாடுகள், அபிவிருத்தி பற்றி ஆராயும் நாடாளுமன்ற குழுவின் தலைவராக செயற்பட்டார்.

1955ல் அகில இலங்கை கூட்டுறவு சம்மேளனம் உருவாக்கி அதன் முதலாவது தலைவராக இருந்து இரண்டு வருடங்களாக செயற்பட்டார்.

தொகுப்பு: தர்மிஷா,

''மக்களின் உயிர் காக்கும் நிறுவனமாம் கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்து மக்கள் சேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்த கூட்டுறவாளர்

**அமரர் வி. வீரசிங்கம் அவர்களின்**

30ம் ஆண்டினை நினைவு கூருவோம்.''

**யாழ். மாவட்ட மக்களின் விவசாய உற்பத்தி உள்ளீடுகளுக்கும் சந்தைப்படுத்தவும்**

**நுகர்ச்சிப் பொருள் தேவைகளுக்கும் ஏற்ற ஓர் கூட்டுறவு நிறுவனம்**

# யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இல. 111, பிரதான வீதி, : யாழ்ப்பாணம்

(ஏ 4559)

★ தமிழகத்தில் இலங்கை திணைக்களம் அமைத்திருந்தால்

# கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்திருக்க முடியாது

(சென்னை)

மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கான இலங்கை தொடர்பான திணைக்களம் தமிழகத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தால் கச்சதீவு தொடர்பான ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டிருக்காது கச்சதீவும் இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டிருக்காது என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாம் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களுக்காக தமிழ் நாட்டில் தனியான திணைக்களம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் திரு. ஏபிராகம் தமிழக அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# பொலிஸ் அதிரடிப்படையினர் மக்களை அடித்து சித்திரவதை

## கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

(மட்டுநகர்]

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப்பகுதி இராணுவ முகாமைச்சேர்ந்த பொலிஸ் அதிரடிப்படையினர் பொது மக்களை வீடுகளில் வைத்து அடித்து சித்திரவதை செய்து வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆண், பெண் வேறுபாடின்றி மக்கள் கண்டபடி தாக்கப்படுவதுடன் பலர் அடிக்கடி பிடித்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இத்தாக்குதல்களினுல் பல பெண்களும் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் பொலிஸ் அதிரடிப்படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ரெலோவினரும் உறுதுணையாக விருந்து வருகின்றனர்.

மக்களின் கால் நடைகளை களவாகப் பிடித்துச் செல்வதிலும் இவர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

# கல்முனை நகரத்தில் கடும் சுற்றிவளைப்பு

(கல்முனை)

மட்டு. கல்முனை நகரத்தில் கடந்த முதலாம் திகதி கடும் சுற்றவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை நகர நுழைவாயிற் பகுதியில் இச்சுற்றிவளைப்பின் போது அதிகபடையினர் நிலை கொண்டிருந்தனர்.

நகரத்திற்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் அனைத்தையும் வழிமறித்து நிறுத்தினர். பின்னர் பயணிகள் கடுமையாக விசாரிக்கப்பட்டு சோதனையிட்டனர்.

# ஐந்து பிரதி அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

புதிதாக நியமனம் கிபற்ற பிரதியமைச்சர்கள் தத்தமது அமைச்சுக்களில் நேற்றுபதவியேற்றுக் கொண்டனர்.

அண்மையில் இடம் பெற்ற அமைச்சரவை மாற்றம் காரணமாக ஐந்து புதிய பிரதி அமைச்சர்கள் நியமனம் பெற்றனர்.

உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, போக்குவரவு சுற்றுடல் மகளிர் விவகார பிரதியமைச்சர் றெஜிரணதுங்கா, கல்வி பிரதி அமைச்சர் ஜோன் செனிவிரத்தின, ஆகியோர் உட்பட ஐந்து பிரதியமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டனர். (ரி)

# தமிழ்ப்பகுதிகளில் தேசியபாடசாலைகள்குறைவு

(கொழும்பு)

எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி ஐக்கியம் விசுவாசம்' புரிந்துணர்வு ஆகிய பண்புகள் பாடசாலை மாணவரிடையே ஏற்படுத்துவதற்கு புதிய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது,

21ம் நூற்றுண்டை எதிர் நோக்கக் கூடிய வகையில் ஒழுக்கம்நற்பண்புகள் என்பனவற்றுக்கு மாணவர்கள் முகங்கொடுக்கக் கூடியதாக இது அமையும் நாட்டில் 160 தேசிய பாடசாலைகள்உள்ளன

இவற்றில் மன்னர் வவனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தேசிய பாடசாலைகள் இல்லை. இவற்றை அமைப்பதற்குகல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, 71-சி

இறந்து விட்டதாக

[1-ம் பக்கத்தொடர்ச்சி[

சுகயீனத்திற்குள்ளாகி மயங்கிய நிலையில் கிடந்த மேற்படி குழந்தையை அதன் தாயார் சிகிச்சைக்காக யாழ். போதன வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது வைத்தியசாலையில் நின்ற சிலர் "குழந்தை இறந்து விட்டது. ஏன் இங்கு கொண்டு வருகின்றீர்கள் . . ?" எனக்கேட்டு அந்தத்தாயை வைத்தியசாலை வாசலில் வைத்தே திருப்பி அனுப்பி விட்டனராம்.

தாளாத துயருடன் அத்தாயும் வீட்டிற்கு குழந்தையை எடுத்துச் சென்று சடலமாக கருதி கட்டிலில் கிடத்திய போது அக்குழந்தை வீரிட்டுக் கத்தியதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த தவராசா என்பவருடைய ஒன்றரை வயதுக்குழந்தைக்கே இக்கதி ஏற்பட்டது. (101)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 15-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber (B/16336/B)

பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லின்போது லெப். அன்பரசன் (கிருஷ்டிராசா - அம்பாறை) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். ரி

ஜனதிபதியின்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக தெரிவு செய்யப்பட்டபின் இந்தியப் பிரதமரின் விசேட துதூவர் ஒருவர் பிரதமரை இந்தியப் பிரதமர் சார்பில் சந்தித்து விசேட செய்தி ஒன்றை கையளித்தது குறிப்பிடத்தக்கது,

புனர்வாழ்வுப் பணியில்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டோர் வடக்கு-கிழக்கில் 215 அகதிமுகாங்களில் தங்கியிருப்பதாக அரசாங்கம் கணக்கிட்டுள்ளது.

இவர்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை வழங்க 17 இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனல் யாழ். குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை சரியாக தெரியாது என்றும் தெரிவித்தார்,

வடபகுதிக்கென நியமிக்கப்பட்ட இணைப்பு அதிகாரி குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்த மக்களை கவனிக்க மாட்டார் எனவும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அகதி முகாம்களையே கவனிப்பார்கள்என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் கடந்த 10 வார காலமாக இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாத நிலையில் இடம் பெயர்ந்தோர் மிகவும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க-ரி)

# பதுக்கலைத் தடுப்பதற்கு விசேட தகவல் பிரிவுகள்

(கொழும்பு)

உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து கொள்ளை இலாபம் ஈட்டுவோர் பற்றிய விபரங்களை திரட்டுவதற்காக இரு விசேட தகவல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

ஒரு பிரிவு ஜனதிபதி செயகத்திலும் மறுபிரிவு வர்த்தக அமைச்சிலிருந்தும் செயற்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்களை பதுக்குவோர். மற்றும் கொள்ளை இலாபம் ஈட்டும் வர்த்தகர்களை பற்றிய விபரங்களை பொதுமக்கள் இப்பிரிவுக்கு தெரியப்படுத்தலாம்.

தகவல் கிடைத்ததும் அரச அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகள்மேற்கொண்டு சம்பந்தப்பட்டோரை கைது செய்வர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வர்த்தகர்களின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு கிடைத்த தகவல்களையடுத்து மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தகர்கள் சிலர் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திலிருந்து பெரும் தொகையான பருப்பை கொள்வனவுசெய்து பதுக்கி வைத்திருப்பதாகவும் அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாம், க-ரி

வேலை வாய்ப்பு

# வலது குறைந்தோருக்கு முதலிடம் வழங்கப்படும்

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும்போது இனிமேல் வலது குறைந்தவர்களுக்கே முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த நடைமுறை இருந்துவந்த போதிலும் முன்பிருந்த அரசு இதனைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டதாகவும் தற்போதைய அரசினுல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சகல திணைக்களத் தலைவர்களுக்கும் இதுசம்பந்தமான சுற்றுநிருபமொன்றும் பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

க. பொ, த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் யாவும் முற்றுப்பெற்று விட்டதாகவும் உரிய விதத்தில் பரீட்சைகள் சிறப்புற நடாத்துவதற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என பரீட்சை பகுதியினர் கேட்டுள்ளனர். [க - ரி)

கணேசலிங்கத்திற்கு

1ம் பக்கத் தொட ச்சி)

திரு. கணேசலிங்கம் பல தடவைகள் பொ. ஐ. மு. அரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்துள்ளார் என்றும் அவர் மீது ஐ. தே. க. உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் தெரிவிககப்படுறது. ரி

அரசின்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பனை செய்யுமிடத்தில் லேக்ஹவுஸ் நிறுவனம் ஒருசில முதலாளிகளிடய மீண்டும் போய்ச் சேரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இவ்வாறு செய்வதை விட இந்த நிறுவனத்தை ஒருகாலத்தில் சொந்தக்காரர்களாக இருந்த ஜே. ஆர்., ரணில், விஜயரத்தின ஆகியோருக்கு திருப்பி ஒப்படைப்பது சிறந்தது என்றும் ஊழியர்களினுல் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பலர் எதிர்ப்புத் தெரிவித்து மேற்கண்டவாறு பல கருத்துக்கள் வெளியிட்டளர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ம ரி

பாதை திறககுமாறு

(1-ம் பக்கத்தொடர்ச்சி[

மறைமாவட்ட ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பாதை திறக்கப்படும் பட்சத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் யாழ்ப்பாணம் செல்வதற்கு வசதியாயிருக்கும் எனவும் தாம் ஜனதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆயருக்கும் ஜனதிபதிக்குமிடையில் கொழும்பில் அண்மையில் சுமூகமான நிலையில் சந்திப்பு இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-ரி

## மலேரியாக்காய்ச்சல் அதிகரிப்பு

[ஆனைப்பந்தி]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது மக்களிடையே மலேரியாக்காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. குடியிருப்பில் இயங்கும் மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற வருவோரில் பெரும்பாலாத்ரிடம் இக்காய்ச்சல் காணப்படுகிறது.

## அமரர் வீரசிங்கம் நினைவு தினவிழா

(அரியாலை)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை பெரியார் அமரர் வி. வீரசிங்கம் 30வது ஆண்டு நினைவுதின விழா இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் யாழ். அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக இருக்கும் யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது, -59

புலிகளுக்கு எதிராக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் விளக்கமளிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னையில் இந்தியா தலையிடக்கூடும் என்ற ஊகங்களை திரு. கதிர்காமர் மறுத்துள்ளதுடன் தாம் மேற்கொள்ளும் இந்தியப் பயணம் குறித்து புலிகள் அஞ்சத்தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தியாவுடன் இலங்கை எந்தவித உடன்பாடு அல்லது ஒப்பந்தம் செய்து கொள்ளும் திட்டம் இலங்கை அரசுக்குக் கிடையாது. இந்தியாவும் இலங்கை இனப்பிரச்னையில் மீண்டும் தலையிட விரும்பாது என்றும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா - இந்திய உறவு நிலைபற்றி விபரித்த கதிர்காமர், கொல்லப்பட்ட ஜனதிபதி ஆர். பிரேமதாசாவின் காலத்தின் பின்னர் இந்திய சிறிலங்கா உறவு மேம்பட்டு வந்ததாகவும் தற்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முன்னைய ஆட்சியில் இருந்ததைப்போல சிறந்த நிலையில் அந்த உறவு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ம ரி)